# அரையாண்டுத் தேர்வு –2025/2026

**மாணவர்களுக்கான புலன்மொழி வளத்தை மேம்படுத்தும் நோக்குடன் அரையாண்டில் புலன்மொழி வளத்தேர்வை முதன்மைப்படுத்தத் தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம் முடிவெடுத்து அதற்கான நெறிமுறைகளைக் கீழே வழங்குகின்றது.**

1. வளர்தமிழ் 1 முதல் 12 வரையான அனைத்து மாணவர்களுக்கும் புலன்மொழி வளத்தேர்வு நடத்தப்படவேண்டும்.
2. வகுப்பிற்குரிய ஆசிரியரோ அல்லது வேறு ஆசிரியரோ தனித்து புலன்மொழி வளத்தேர்விற்கான புள்ளியிடலை நடுநிலையோடு மேற்கொள்ளலாம்.
3. எழுத்து / புலன்மொழி வளத்தேர்வுகளின் முடிவுகள் தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்திற்கு 15/02/2026 இற்கு முன்னதாக அனுப்பிவைக்க வேண்டும்.
4. புள்ளிகளை அனுப்புவதற்கான மாணவர் பட்டியலும், மாதிரிப் புள்ளித்தாள்களும் வினாத்தாள்களுடன் பள்ளிகளுக்கு வழங்கப்படும்.
5. பள்ளிகள் தமது செயற்பாட்டிற்கு ஏற்ற வகையில் புலன்மொழி வளத்தேர்வுகளை ஒழுங்கு செய்து கொள்ளமுடியும்.

## தேர்வு முறை.

### 1.வாசித்தல்

வாசிப்போம் நூலிருந்து தெரிவு செய்யப்பட்ட பந்தி ஒன்றை குறிப்பிட்ட வகுப்பிற்குரிய மாணவரை வாசிக்கச் செய்து புள்ளியிடல்.

### 2.கேட்டல்

**வளர்தமிழ் 1 – 10**

பணியகத்தால் வழங்கப்படும் இறுவட்டை ஒலிக்கவிட்டு புள்ளியிடல் வேண்டும்.

(இறுவட்டு பணியகத்தில் மீளளிக்கப்பட வேண்டும்)

### 3.பேசுதல்

**வளர்தமிழ் 1 – 2**

வளர்தமிழ் 1–2 பேசுதல் நூலிலுள்ள ஏதாவது ஒரு படத்தைக் கொடுத்து 5 வினாக்கள் கேட்க வேண்டும்.

**வளர்தமிழ் 3 – 5**

பொதுத் தேர்விற்குரிய பேசுதல் தலைப்புகளில் ஏதாவது ஒன்றைக் கொடுத்து பேசவைத்துப் புள்ளியிடல்.

**வளர்தமிழ் 6 – 12**

பொதுத்தேர்விற்குரிய பேசுதல் தலைப்புகளிலிருந்து முதல் மூன்று பாடத்தலைப்பு, பொதுத் தலைப்புகளில் ஏதாவது ஒன்று மாணவரால் தெரிவுசெய்யப்பட்டு, பேசவைத்து புள்ளியிடல் வேண்டும்.

அரையாண்டுத் தேர்வு முடிவுகளைக் கொண்டு மாணவரின் கற்றல் திறனை இனங்கண்டு இறுதித் தேர்விற்கு அணியம் செய்யவும் இந்தத் தேர்வு முறைகள் உதவும் என்பதைக் கருத்திற் கொண்டு பள்ளிகள் செயற்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.